# பத்திரிக்கைச் செய்தி

**சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்பட்டுவரும் ஒருங்கிணைந்த சேவை மையத்தில் பாதுகாவலர் பணியிடம் மற்றும் மாவட்ட மகளிர் அதிகார மையத்திற்கு பாலின வல்லுநர் தற்காலிக பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் இரா.சுகுமார் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்,**

குடும்பத்தில் மற்றும் சமுதாயத்தில் பெண்களுக்கு எதிரான பிரச்சினைகளைத் தடுக்கும் நோக்கத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்படும் ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre) அதில் சுழற்சி முறையில், **பாதுகாவலர்** பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவதற்கு திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மேலும் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களை தொழல் முனைவோர்களாக மாற்றவும், அவர்களின் பாதுகாப்பிற்கான உதவி எண்கள் குறித்தும், குழந்தை திருமணம் தடுப்பு போன்றவற்றிற்கான விழிப்புணர்வு வழங்கிட செயல்பட்டு வரும் மாவட்ட மகளிர் அதிகார மையத்தில் **பாலின வல்லுநர்** பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவதற்கு திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எ | பதவி | காலிப் பணியிடம் | படிப்பு & முன் அனுபவம் | வயது வரம்ப | சம்பளம் |
|---|---|---|---|---|---|
| 1. | பாலின வல்லுநர் (Gender Specialist) | 1 மாவட்ட மகளிர் அதிகார மையம் (DHEW) | 1 சமூகப்பணி மற்றும் சமூகவியல் துறையில் இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். மேலும் 3 வருடம் அரசு/ தனியார் தொண்டு நிறுவனங்களில் மகளிர் முன்னேற்றம் தொடர்பாக பணிபுரிந்த முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். | 40 வயதிற்குள் | ரூ.21,000/- |
| 2. | பாதுகாவலர் (Security) (மகளிர் மட்டும்) | 1 ஒருங்கிணைந்த சேவை மையம் (OSC) | பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தனியார்/அரசு துறை அலுவலகங்களில் பாதுகாவலராக பணிபுரிந்து முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். | 40 வயதிற்குள் | ரூ.12,000/- |

விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் பணியிடத்திற்கான படிவம் மற்றும் தகுதியான விபரங்கள் போன்ற குறிப்புகளை https://tirunelveli.nic.in/என்ற திருநெல்வேலி மாவட்ட இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்டவிண்ணப்பங்களை மாவட்ட சமூகநல அலுவலகம், மணிமுத்தாறு வளாகம் முதல் தளம், மாவட்ட ஆட்சியரகம், திருநெல்வேலி-627009 என்ற முகவரிக்கு 11/11/2025 முதல் 24/11/2025க்குள் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு மாவட்ட சமூக நல அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டஆட்சித்தலைவர்
திருநெல்வேலி